**உறுதியளிக்கப்பட்ட கூடுதல் தொகையுடன் கூடிய குழந்தைகள் பணமீட்புத் திட**

இது ஒரு குழந்தைகள் பணமீட்புத் திட்டமாகும். இத்திட்டத்தில் குழந்தையின் 18, 20, 22, 24, 26 வயதுகளில் பணம் கிடைக்கிறது. இத் தொகை குழந்தையின் மேற்படிப்பிற்கு மற்றும்

**உறுதியளிக்கப்பட்ட கூடுதல் தொகை**

வங்கிகளில் வட்டி விகிதம் குறைந்து கொண்டிருக்கின்ற இன்றைய சூழலில் இத்திட்டத்தில் எல்.ஐ.சி உறுதியளிக்கப்பட்ட கூடுதல் தொகையாக 1000 காப்புத் தொகைக்கு ரூபாய் 75%- வழங்குகிறது. இது வருடந்தோறும் கணக்கில் சேர்ந்து பாலிசி முதிர்வின் போதோ அல்லது அதற்கு முன்னர் இறப்பின் போதோ காப்பீட்டுத் தொகையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது.

மேலும் ஒரு தொகையாக பற்றுறுதிக்கான கூடுதல் தொகை பாலிசி முதிர்வின் போதோ அல்லது அதற்கு முன்னர் இறப்பின் போதோ வழங்கப்படுகிறது. இத்தொகை எல்.ஐ.சி யின் அனுபவத்தைப் பொறுத்தே அமையும். ஆனால் பாலிசி எடுத்த 4 வருடத்திற்கு முன்னர் இறப்பு நேர்ந்தால் இத்தொகை

**இறப்புக் காப்பு**

இறப்புக் காப்பு இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும். பாலிசிதாரருக்கு (குழந்தை) இறப்புக் காப்பு, அவரின் 7 வயது அல்லது பாலிசி தேதிகளிலிருந்து 2 ஆண்டுகளுக்குப் பின்னர் இவைகளில் எது பிந்தையதோ அன்றைய தேதியிலிருந்து துவங்குகிறது. இதன் படி :-

காப்பு துவங்கும் தேதிக்கு முன் பாலிசிதாரருக்கு இறப்பு நேர்ந்தால் அதுவரை செலுத்திய பிரீமியம் (கூடுதல் பிரீமியங்கள் நீங்கலாக) வழங்கப்படும். இத்துடன் பாலிசி நிறைவு பெறுகிறது.

காப்புத் தேதிக்கு பின்னர் இறப்பு ஏற்பட்டால், ஒரு காப்புத் தொகை மற்றும் அன்று வரை கணக்கில் சேர்ந்த உறுதியளிக்கப்பட்ட கூடுதல் தொகை வழங்கப்படும். ஏதாகிலும் வாழ்வுகாலப் பயன்கள் முன்னர் வழங்கப்பட்டிருந்தாலும் அவை கழித்துக் கொள்ளப்படமாட்டா.

**பிரீமிய விலக்குச் சலுகை**

இச் கலுகை மூலம் முன் மொழிவாளருக்கு இறப்புக் காப்பு கிட்டுகிறது. பாலிசி காலவரைக்குள். முன்மொழிவாளருக்கு இறப்பு ஏற்பட்டால் அன்றையிலிருந்து குழந்தையின் 18 வயது வரையிலான அனைத்து பிரீமியங்களிலிருந்தும் விலக்கு அளிக்கப்படுகிறது. ஆயினும் வாழ்வுகாலப் பயன்கள்குறிப்பிட்ட தேதிகளில் வழங்கப்படுகிறது. இதன் மூலம் குழந்தையின் எதிர்காலத் தேவைகள் உறுதியாக பூர்த்தி செய்யப்படும்.

**கூடுதல் இறப்புக் காப்பு**

இச் சலுகை மூலம் முன் மொழிவாளருக்கு இறப்பு ஏற்படும் பொழுது அவரின் குடும்பத்தாருக்கு உடனடியாக 20 சதம் காப்புத் தொகை (அதிக பட்சமாக ரூ.100000) வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மற்ற பயன்கள் தொடர்கிறது.

மேற் கூறிய இவ்விரண்டு விருப்பச் சலுகைகளையும் சற்றே கூடுதல் பிரீமியம் செலுத்திப் பெறலாம்.

**பணத்திற்கு முழு பாதுகாப**

நாம் முதலீடு செய்கின்ற பணம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமாயின் அது பாதுகாப்பானோர் கைகளில் இருக்க வேண்டியது அவசியமாகிறது. அந்த வகையில் எல்.ஐ.சி.யில் முதலீடு செய்கின்ற தொகை நேர்மையான நிர்வாகம் தெளிவான முதலீட்டுக் கொள்கை என பல்வேறு சிறப்புகளைக் கொண்ட நிர்வாகத்தின் வசம் இருக்கிறது.

இந்த அறிக்கை, இத்திட்டத்தின் பயன்களை தாங்களுக்கு முழுமையாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற நோக்கம் கொண்டது. அதிக படியான அல்லது சட்டரீதியான விளக்கங்கள் பெற பாலிசி பத்திரம் ஒன்றையே ஆதாரமாகக் கொள்ள வேண்டும்.

**வருமான வரி சலுகைகள**

**Section 80(C) of IT Act.**

மேற்கூறிய வருமானவரி விதியின் படி காப்பீட்டுக்காக கட்டப்படும் பிரீமியத்தொகைக்கு வருமான வரி விலக்களிக்கப்படுகிறது. நிகர வருவாயில் இப்பாலிசிக்கான பிரீமியத்தொகை நேரடியாக குறைக்கப்படுகிறது. இச்சலுகைக்கான அதிக பட்சமாக உச்ச வரம்பு 1,00,000 ஆகும்.

இந்த சலுகை பாலிசிதாரரின் பெயரிலுள்ள பாலிசிகளுக்கு மட்டுமல்லாமல், மனைவி மற்றும் பிள்ளைகளின் பாலிசிகளுக்கும் பொருந்தும். (மணமான மகள்களின் பெயரில் உள்ள பாலிசிகளும் இதில் சேரும்)

**Section 10(10D) of IT Act.**

வாழ்வு காலப் பயன்கள், முதிர்வுத்தொகை அல்லது இடையில் இறப்பு நேர்ந்தால் வழங்கப்படும் இறப்புச் காப்புத்தொகை இவை அனைத்திற்குமே வருமான வரி விலக்கு அளிக்கப்படுகிறது. அந்த தொகைக்கு வருமானவரி செலுத்த தேவையில்லை. இது காப்புத் திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு சலுகையாகும்.